Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 7, 2022

புதன்கிழமை 07, செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 094 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஒரு மாதத்தின் சம்பளம் ரூ.1 இலட்சமாயின் 6% வரி




வருமான வரி செலுத்துவதற்கான வருடாந்த எல்லைப் பெறுமதியை 1.2 மில்லியனாக குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதன் பிரகாரம், மாதமொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அதிகமான தொகையை வருமானம் பெறுவோரிடமிருந்து ஆகக்குறைந்தது 6 சதவீதத்தை வருமான வரியாக அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தொடர்ச்சி P2

# வடக்கு மக்களுக்கு சீனாவால் தொல்லை

பா.நிரோஸ்

இலங்கையின் அமைதியின்மைக்கு சீனாவின் மறைமுக தலையீடுகள் இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் சபையில் தெரிவித்ததுடன், வட மாகாண காணிகள் சீனாவுக்கு வழங்கப்படுவதால், வடக்கு மாகாண மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மந்தபோசனை என்பது மனித மூலதனத்தை எந்தளவு பாதிக்கும் என்பதற்கு போசனைப் பற்றாக்குறையே பிரதான காரணம். இதுபோன்ற முக்கியமான விடயம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போது அமைச்சர்கள் எவரும் சபையில் இல்லை. இதனாலேயே ஆசியாவின் ஆச்சிரியம் என இலங்கையை கூறுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




புதிய பயணத்தை

# அச்சமின்றி ஆரம்பிப்போம்

தொடர்ந்தும் எம்மால் பிச்சை எடுத்து உண்ண முடியாது, கடன்களில் வாழ முடியாது. கடினமான நிலையிலும் கடனை செலுத்தி முடிப்போம். கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம், புதிய பொருளாதார கொள்கையை வகுப்போம். மாற்று வழிமுறைகளை தேடுவோம். அதன் மூலமாக பலமடைந்து புதிய பயணத்தை ஆரம்பிப்போம். நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுப்போம். அச்சமின்றி இந்த பயணத்தை ஆரம்பிப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்,

தொடர்ச்சி P2





## ஐ.எம்.எப் அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்கவும்

### பிரதான எதிர்க்கட்சிகள் கோரிக்கை

பா. நிரோஸ்

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சிகள் நேற்று (6) சபையில் கோரிக்கை விடுத்தன.

தொடர்ச்சி P2

## உணவுப் பாதுகாப்பு மோசமடையும்

### உலக உணவுத் திட்டம் அச்சம்

இலங்கையிலுள்ள ஒவ்வொரு ஐந்து குடும்பங்களில் நான்கு குடும்பங்கள் உணவைத் தவிர்க்க அல்லது உண்ணும் உணவின் அளவைக் குறைக்கப் பழகிவிட்டனர் என்றும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மோசமடையும் என்ற அச்சம் நிலவுவதாகவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

4,000 கிலோ நெல் நாசம்

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

பொலன்னறுவை, அரலகங்வில நெல் களஞ்சியசாலையில் 4000 கிலோகிராம் நெல் நாசமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அலட்சியமாக இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, அம்பாறை மற்றும் பொலன்னறுவை பிராந்திய முகாமையாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## எரிபொருள் விநியோகத்தில் அரசாங்கத்துக்கு இலாபம்

பா.நிரோஸ்

விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருளை விநியோகிப்பதில் அரசாங்கம் இலாபமடைந்து வருவதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பொம்மையை வைத்திருந்த பெண் அதிரடியாக கைது



துணியால் சுற்றப்பட்டு, தனது மார்பகங்களுடன் அணைத்து பொம்மையொன்றை வைத்திருந்த பெண்ணொருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டு, அறுவுறுத்தலின் பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவமொன்று கோட்டை ரயில் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. தனது பிள்ளைக்கு கொடுப்பதற்கு பால் தேவை, பால்பக்கற் வாங்குவதற்கு தேவையான பணத்தை திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே, அந்தப் பெண், பொம்மையொன்றை துணியால் சுற்றிவைத்துக்கொண்டு, ரயில்களில் பிச்சையெடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

சவூதி அரேபியா

## வர்த்தக உயர்மட்ட குழு இலங்கை வர ஏற்பாடு

ஏ.எச்.ஏ. ஹூஸைன்

வர்த்தகம், முதலீடு, விவசாயம், மீன் வளர்ப்பு, சுரங்கத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைகளில் ஒத்துழைப்புக்களை விரிவாக்கும் நோக்கில், சவூதி அரேபியாவின் வர்த்தக உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவொன்று, விரைவில் கொழும்பு வரவுள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக சவூதி அரேபியா சென்ற அமைச்சர் நஸீர் அஹமட், அங்கு முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டார்.

தொடர்ச்சி P2



## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு இறக்குமதி செலவினம் குறைவு

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

இந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்த அதேவேளை, தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.




மத்திய வங்கியினால் நேற்று (06) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்களுக்கு மத்தியில் வங்கித் தொழில் முறைமையில் காணப்பட்ட செயற்பாடுகளின் ஒட்டுமொத்த மிதமடைதலின் தாக்கத்தினைப் பிரதிபலித்தாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சூத்திரத்தால் குறைக்கலாம்

எரிபொருள் விலை சூத்திரம் அமுல்படுத்தப்பட்டால், உலக சந்தையில் உள்ள விலைகளுக்கு ஏற்ப ஒரு லீற்றர் எரிபொருளின் விலையை 50 ரூபாயால் குறைக்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிப்பதற்கு அங்கிகாரம்

பயங்கரவாதம் மற்றும் வன்முறையான தீவிரவாதத்தின் புதிய வடிவங்கள் தொடர்பான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக தற்போது காணப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களிலுள்ள பலவீனங்களை தவிர்ப்பதற்கும், அவ்வாறான செயற்பாடுகளை எதிர்கொள்வதற்கும், சட்ட வலுவாக்கம் செய்வதற்கும், விசாரணை மற்றும் புலனாய்வு செயற்கருவிகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் விரிவான தேசிய பாதுகாப்பு சட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இறுக்கினால் உறவு பாதிக்கும்

பா.நிரோஸ்

சீன உரக்கப்பல் விவகாரத்தில் இலங்கை தரப்பில் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்குமானால் சீனா- இலங்கை நட்புறவில் பாதிப்புக்கள் ஏற்படலாம். எனவே, இலங்கை-சீனாவுக்கு இடையிலான நல்லுறவுகள் பாதிக்கப்படாத வகையில் இராஜதந்திர ரீதியில் இவ் விவகாரம் கையாளப்படுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



இலங்கைக்கு செல்வோரின்

## பயண ஆலோசனையை புதுப்பித்தது கனடா



இலங்கைக்கு விஜயம் செய்யும் தமது பிரஜைகளுக்கு விதித்திருந்த பயண ஆலோசனையை கனேடிய அரசாங்கம் புதுப்பித்துள்ளது.

அதற்கமைய செம்மஞ்சள் பட்டியலில் இருந்த இலங்கையை மஞ்சள் பட்டியலுக்கு கனடா மாற்றியுள்ளது.

அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்தல் என்பதிலிருந்து அதிக அளவு எச்சரிக்கையுடன் செயற்படவும் என்னும் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கைக்கான பயணத்தின் ஆபத்து நிலை குறைவடைவதை இந்த மாற்றம் சுட்டிக்காட்டுகிறது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்கு மக்களுக்கு சீனாவால் தொல்லை

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகவும், யுத்தம் நிறைவடைந்த 12 வருடங்களுக்கு மேலாகவும் வடக்குக் கிழக்கு குழந்தைகள் போசாக்கின்மையோடு பிறந்து போசாக்கின்மையோடுதான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் 1990ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரையில் வடக்குக் கிழக்கு பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் போசாக்கின்மையோடு வாழ வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது. தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட போசாக்கின்மை தொடர்பில் பேசிக்கொண்டிருக்கிறோம். இதனை தமிழர்கள் இதற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகிறார்கள் என்றார்.

இலங்கையில் அதிகளவில் போசாக்கின்மையால் கிளிநொச்சி மாவட்டமே பாதிக்கப்பட்டுள்ளது. கடலட்டைகளை உற்பத்தி செய்வதற்கு வடக்கின் காணிகள் சீனாவுக்கு வழங்கப்படுகிறது. சீனாவின் நடவடிக்கைகளால் வட மாகாண மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். இதனால் வடக்கில் போசாக்கின்மை அதிகரிக்கிறது எனவும் தெரிவித்தார்.

## ஐ.எம்.எப் அறிக்கையை...

பாராளுமன்றத்தில் நேற்று (06) விசேட கூற்றொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது கடந்த மார்ச் 23ஆம் திகதி இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் அதேபோன்று கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி பாராளுமன்றத்திலும் சர்வதேச நாணய நிதிய பணியாளர் மட்ட உடன்படிக்கையை உடனடியாக பாராளுமன்றத்துக்கு சமர்க்கவேண்டும் என கேட்டுக்கொண்டிருந்தார்.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அந்த முன்மாதிரியை அடிப்படையாகக்கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை சபைக்கு சமர்ப்பிக்குமாறும் அதனை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அந்த உடன்படிக்கையை ஆராய்ந்து, நாட்டுக்கு மிகவும் நல்ல விடயங்கள் என்ன என்பது தொடர்பில் எமது நிலைப்பாட்டையும் தெரிவிக்க முடியும் என்றார்.

அதன்பின்னர் கருத்துரைத்த எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிடுகையில், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் அரசாங்கம் சர்வதேச நாயண நிதியத்துடன் ஒப்பந்தங்களை செய்யும்போது அது தொடர்பில் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும். உடன்படிக்கையை முழுமையாக சபைக்கு சமர்ப்பிக்க முடியாமல் இருக்கலாம். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும் இதன் வரைபையாவது நாங்கள் தெரிந்துகொண்டால்தான் எமக்கும் ஒப்பந்தம் தொடர்பில் புரிந்துகொள்ளலாம் என்றார்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்துரைக்கையில்,, சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட ஒப்பந்தம் தொடர்பில் சபையில் கேட்ட கேள்விக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருந்து பதிலளிக்கையில், ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக தெரிவித்திருந்தார் என்ற செய்தி ஹன்சாட்டில் பதிவாகி இருக்கின்றது. அதனால் இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியாதென அதிகாரிகளுக்கு தெரிவிக்க முடியாது என்றார்.

இதற்கு சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்படிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

## உணவுப் பாதுகாப்பு...

உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜூலை முதல் டிசெம்பர் வரையிலான காலப் பகுதியில், 3.4 மில்லியன் இலங்கையர்களுக்கு உதவுவதற்குத் தேவையான 63 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 21.35 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் இலங்கையர்கள் மேலும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் 6.3 மில்லியன் இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்னும் அதிகமாக இருப்பதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு உள்நாட்டு சந்தையில் விநியோகச் சங்கிலியை சீர்குலைத்துள்ளதுடன் சந்தையில் உள்ளூர் பொருட்களின் விலைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, ஜூலை மாதம் 60.8 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 64.3 சதவீதமாக உயர்ந்துள்ள என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அவசர உதவி தேவைப்படும் 61,000 உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு 10,000 ரூபாய் பண உதவியை வழங்க உலக உணவுத் திட்டம் ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏற்றுமதி வருமானம்...

அதேவேளை, அவசரமற்ற இறக்குமதிச் செலவினங்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளும் இறக்குமதிக் கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்த உதவியதாக தெரிவித்தது.

இதன் விளைவாக, வர்த்தகப் பற்றாக்குறையானது, ஜூலை மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்ததன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட அழுத்தங்களைத் தளர்த்தியது என்று வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஜூலையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் சிறிதளவு அதிகரித்துக் காணப்பட்டதாக வங்கி குறிப்பிட்டது

சுற்றுலாத்துறை வருமானம், குறைந்தளவிலான தளத் தாக்கத்தின் அடிப்படையில் 2022 ஜூலையில் (ஆண்டுக்காண்டு) அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்ததாகவும் அரச பிணையங்கள் சந்தையிலும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் ஜூலையில் சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதி வழங்கும் பொருட்டு மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையைத் தொடர்ந்தும் வழங்கியமையினால் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் பயன்படுத்தக்கூடிய மட்டம் குறைவடைந்து காணப்பட்டதாக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் விநியோகத்தில்...

எரிபொருள் விலைகளை ஒரே தடவையில் குறைக்க முடியாது. எரிபொருள் விலை உலக சந்தையில் குறையும் அதே தினத்தில் உள்நாட்டிலும் எரிபொருள் விலையை குறைக்க முடியாது என்றார். தற்போதுள்ள எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் அரசாங்கத்துக்கு இலாபம் கிடைக்கின்றது என்றார்.

## தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிப்பதற்கு அங்கிகாரம்

அதற்கமைய, குறித்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் சர்வதேச தரநியமங்கள், பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு தேசிய பாதுகாப்பு தொடர்பாக முழுமையான சட்ட முறைமையொன்றுக்கான அடிப்படைச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல்மைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல்மைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## வர்த்தக உயர்மட்ட...

றியாத் வர்த்தக சம்மேளனம், முஸ்லிம் உலக சம்மேளனம் மற்றும் மன்னர் சல்மான் அமைப்பு பிரதிநிதிகள் உட்பட சவூதி வெளி விவகார அமைச்சின் அதிகாரிகளையும் அமைச்சர் சந்தித்தார்.

முடிக்குரிய இளவரசர் சல்மான்பின் அப்துல் அஸீஸ் 2030இல் முன்னெடுக்கவுள்ள சுற்றுலா, வர்த்தகத்துறை மேம்பாடுகளில் இலங்கையையும் உள்வாங்குவதற்கான விருப்புக்களை அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது வெளியிட்டிருந்தார்.

இதனடிப்படையில் இதற்கான முன்னோடிக் கள விஜயமாக சவூதிஅரேபிய வர்த்தக உயர்மட்ட பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளது.

இதேவேளை, நவம்பர் 06 முதல் 18 வரை எகிப்தில் இடம்றெவுள்ள காலநிலை மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் நஸீர் அஹமட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான எகிப்து தூதுவர் மேஜட் மொஸ்லிஹ், சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட்டை சந்தித்து இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

# அச்சமின்றி ஆரம்பிப்போம்

ஐக்கிய தேசிய கட்சியின் 76வது ஆண்டு விழா. சுகததாச உள்ளக அரங்களில் நேற்று (6) இடம்பெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஆயுதம் ஏந்தாமல், வெடிகுண்டை கையில் எடுக்காமல் முதல் தடவையாக இளம் சமுதாயம் ஒரு போராட்டத்தை நடத்தி, மாற்றம் வேண்டும் என வலியுறுத்தினர். அதனை நாம் ஏற்றுக்கொண்டோம், எனினும், அதற்குள் கிளர்ச்சியை உருவாக்கி போராட்டத்தை ஒரு சிலர் நாசமாக்கினர். சரியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் திசை மாறியது. இப்போது போராட்டம் இல்லை என்றாலும் இளைஞர்களின் நோக்கம் முன்னோக்கி கொண்டு செல்லப்படுகின்றது.

நாட்டின் பிரதான வேலைத்திட்டங்களை அரசியலுக்கு அப்பால் கொண்டு சென்று செய்து முடிப்போம். மாற்றம் ஒன்று வேண்டும் என கேட்கின்ற இந்த நிலையில் சகலரையும் இணைத்துக்கொண்டு இந்த மாற்றத்தை உருவாக்குவோம்.

நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். பலரது உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றை நான் செய்து முடிப்பேன். அடுத்த பெரும்போகத்தில் உரம், எரிபொருள் என சகலத்தையும் நாம் பெற்றுக்கொடுப்போம். அதற்கான இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டுள்ளோம். தொடர்ந்தும் எம்மால் பிச்சை எடுத்து உண்ண முடியாது, எம்மால் கடன்களில் தொடர்ந்தும் வாழ முடியாது. நாம் எவருமே வங்குரோத்து நிலைக்கு மாற விரும்புவதில்லை. கடினமான நிலையிலும் கடனை செலுத்தி முடிப்போம். கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம், புதிய பொருளாதார கொள்கையை வகுப்போம். மாற்று வழிமுறைகளை தேடுவோம். அதன் மூலமாக பலமடைவோம். புதிய பயணத்தை ஆரம்பிப்போம்.

ஜப்பானுக்கு முடியும் என்றால், சிங்கப்பூருக்கு முடியும் என்றால், கொரியாவுக்கு முடியும் என்றால், டுபாய்க்கு முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது. 2020-2025 ஆண்டுக்குள் பலமான வளமான நாட்டை உருவாக்குவோம். அடுத்த ஆண்டே அதனை நோக்கி பயணிப்போம். இதன் இறுதியை பார்க்க நான் இருக்க மாட்டேன், ஆனால் இன்றைய இளம் சமுதாயம் வளமக வாழும் சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. எமது கொள்கையை உறுதியாக முன்கொண்டு செல்வோம்.

ஐக்கிய மக்கள் சக்தியாக இருந்தாலும் , பொதுஜன முன்னணியானாலும்,.ஜே.வி,பியானாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பென்றாலும் ஏனைய சகல கட்சிகளாக சுயாதீன அமைப்புகளாக இருந்தாலும் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். நாம் அனைவரும் ஒன்றிணைவோம் . ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுப்போம். மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் சகலரும் ஒன்றிணைந்து அச்சமின்றி இந்த பயணத்தை ஆரம்பிப்போம். முதல் போராட்டம் முடிந்துவிட்டது, நாட்டை ஒன்றிணைக்கும் இரண்டாம் போராட்டத்தை இன்றில் இருந்து ஆரம்பிப்பேன்.

ஐக்கிய தேசிய கட்சியில் தெரிவான நான்காவது ஜனாதிபதியாக நான் உள்ளேன், ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கமோ, பாராளுமன்ற குழுவோ இல்லை என்ற சிறப்பம்சம் எனக்குண்டு. மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் மீதான நம்பிக்கையை வைத்து ஒன்று கூடிய சகல மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## பொம்மையை வைத்திருந்த...

அவ்வாறு பிச்சை எடுத்துக்கொண்டிருந்த போதே, மேற்படி பெண்ணை ரயில் பாதுகாப்பு பிரிவினர் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

குழந்தையை துணியால் சுற்றியிருந்த விதம் மற்றும் அவ்வாறு இருந்தால், குழந்தைக்கு மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்படும் என்பதை உணர்ந்த ரயில் பாதுகாப்புப் பிரிவினர். அந்தப் பெண்ணை அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்தினர். அதன்போதே, மேற்படி விவகாரம் அம்பலமானது.

கடுமையாக எச்சரித்த பாதுகாப்பு பிரிவினர். அப்பெண்ணை அங்கிருந்து அனுப்பிவைத்துள்ளனர்.

## இறுக்கினால் உறவு...

பாராளுமன்றத்தில் நேற்று (06) இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் அமரவீர மேலும் கூறுகையில்,

சீனாவுடனான உர விவகாரம் தொடர்பில் நாம் அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பித்துள்ளோம்.மேற்படி உர விவகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீன நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளது.அந்த நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டோம் எனினும் அது கைகூடவில்லை. அதேபோன்று அந்த உரத்துக்குப் பதிலாக இரசாயன உரத்தை பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தோம் அதுவும் கைகூடவில்லை.

அதேவேளை, சேதன பசளை தொடர்பில் எம்மிடம் இன்னும் முறையான தர நிர்ணயம் செய்யக்கூடிய நிலை கிடையாது. எவ்வாறெனினும் மேற்படி விவகாரத்தை நாம் கைவிடவில்லை. அது தொடர்பில் இராஜதந்திர ரீதியில் முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.இரண்டு நாடுகளினதும் நல்லுறவுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதனை முன்னெடுக்க வேண்டியது அவசியம் . அந்த வகையில் வெளிவகார அமைச்சு இலங்கையில் உள்ள சீனத் தூதுவருடன் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

## சூத்திரத்தால் குறைக்கலாம்

மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், இவ்வாறான எரிபொருள் சலுகையை மக்களுக்கு வழங்க வாய்ப்பு காணப்படுவதாக ஹர்ஷ எம்.பி சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் விலைச் சூத்திரத்தின் பிரகாரம் செயற்படுவதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதும் வரி செலுத்தியதன் பின்னர், அரசாங்கத்துக்கு தற்போது ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபாய் இலாபம் கிடைத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

விலைச்சூத்திரம் தொடர்பில் சட்ட நிலை எதுவும் இல்லாத காரணத்தால் அரசாங்கம் விரும்பியவாறு செயற்பட முடியும் என்றார்.

## ஒரு மாதத்தின் சம்பளம் ரூ.1 இலட்சமாயின் 6% வரி

இது தொடர்பான அமைச்சரவை அனுமதிப் பத்திரம் எதிர்வரும் நாட்களில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அமைச்சரவை அனுமதியைத் தொடர்ந்து, இந்தத் தீர்மானம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்க உள்ளக மட்டத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வரி அறவீட்டு முறை முன்னைய அரசாங்கத்தில் காணப்பட்டதுடன், கோட்டாபய ராஜபக்ச, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தத்தினூடாக, வருமான வரி அடங்கலாக பல்வேறு வரிகள் நீக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வருடாந்த வருமான வரி அறவிடும் எல்லைப் பெறுமதி 3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த வரி அதிகரிப்பு தொடர்பில் 2022 மே மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டு, இந்த எல்லைப் பெறுமதி ரூ 1.8 மில்லியன் வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் நாட்களில் முன்வைக்கப்படவுள்ள அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் முதல் 1.2 மில்லியன் ரூபாய்க்கு அப்பால் உழைக்கும் ஒவ்வொரு மேலதிக 5 மில்லியன் ரூபாய்க்கும் தலா 12, 18, 24, 30 மற்றும் 36 சதவீதம் என வரி அறவிடப்படும்.

கடந்த வாரம் இலங்கை அரசாங்கத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற ஆரம்பக் கட்ட பேச்சு வார்த்தைகளின் போது, இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் 48 மாத காலப்பகுதிக்காக அந்நிதியத்தினால் வழங்கப்படும் 2.9 பில்லியன் டொலர் நிதி வசதியைப் பெற்றுக் கொள்வதில் பின்பற்ற வேண்டிய அடிப்படை அம்சங்களில் இந்த வரித் திருத்தமும் அடங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக பிடித்து வைத்திருக்கும் வரி அறவீட்டிலும் திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

## ஒழுக்காற்று நடவடிக்கை...

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நீல் டி அல்விஸூக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பழுடைந்துள்ள நெல் கையிருப்பு அம்பாறை பிராந்தியத்துக்கு சொந்தமானது என்பதால், இது தொடர்பாக, ஆறு நாட்களுக்குள் உடனடியாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அம்பாறை பிராந்திய முகாமையாளருக்கு, சபையின் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த அதிகாரிகளின் கட்டாய விடுமுறை தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான கிடங்குகளில் உள்ள பழைய நெல்லை கால்நடை உணவுக்காக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 2020ஆம் ஆண்டில் அனைத்து பிராந்திய முகாமையாளர்களுக்கும் நெல் சந்தைப்படுத்தல் சபை அறிவுறுத்தியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2015ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 4,000 கிலோ கிராம் அரிசி தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காமல், அரலகங்வில களஞ்சியசாலையில் சேமித்து வைத்திருந்தால் அதற்கு சம்பந்தப்பட்ட பிராந்திய முகாமையாளர்களே பொறுப்புக் கூற வேண்டும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நெல் களஞ்சியசாலைகளையும் சோதனை செய்து, அவற்றில் பழைய நெல் கையிருப்புகள் உள்ளனவா என்பதைக் கண்டறிந்து, உடனடியாக தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல் சந்தைப்படுத்தல் சபைத் தலைவருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## பயண ஆலோசனையை புதுப்பித்தது கனடா

எரிபொருள், உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கு இன்னும் தட்டுப்பாடு நிலவும் நாட்டில் பொருளாதார நெருக்கடி இன்னும் நீடிப்பதால், இலங்கை பச்சை பட்டியலில் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதத்தின் இறுதியில், பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மொத்த சனத் தொகையில்

# 49 இலட்சம் பேருக்கு உணவு பாதுகாப்பு இல்லை

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் அதிபோசனை தேவைப்பாடுடையவர்களாக உள்ள அதேவேளை, நாட்டின் மொத்த சனத்தொகையில் 57 இலட்சம் பேர் மனிதாபிமான உதவிகள் அவசியமானவர்களாவும், 49 இலட்சம் பேர் உணவு பாதுகாப்பு அற்றவர்களாகவும் இருக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேராட்ன தெரிவித்துள்ளார்.

உலகலாவிய சிறுவர் மந்தபோசனை தரப்படுத்தலுக்கமைய 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாமையினால் இலங்கை அது தொடர்பான பட்டியலில் 6 ஆவது இடத்தில் உள்ளது. தெற்காசியாவில் அதிக மந்தபோசனைக்கு உள்ளான நாடுகளின் பட்டியலில் இரண்டாமிடத்திலும் இருப்பதாக அண்மையில் யுனிசெப் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.



எமது நாட்டில் தற்போது 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அதி போசனை தேவைப்பாடுடையவர்களாக இருக்கின்றனர். இவர்களில் 27 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 5 வயதுக்கும் குறைந்தவர்களாகும். அதேபோன்று சனத்தொகையில் 57 இலட்சம் பேருக்கு மனிதாபிமான உதவிகள் அவசியமாகவுள்ளது. அதாவது மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு இந்த உதவிகள் தேவையாகவுள்ளது.

அத்துடன் உணவு இன்மையினால் 10 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவன ரீதியிலான பாதுகாப்பை பெறுகின்றனர். அதேபோன்று மொத்த சனத் தொகையில் 49 இலட்சம் பேருக்கு உணவு பாதுகாப்பு இல்லாது உள்ளது. 10 இல் மூன்று பேருக்கு உணவு பாதுகாப்பு இல்லையென்றே புள்ளி விபரத் தகவல்கள் கூறுகின்றன எனக் குறிப்பிட்டார்.



# ஆளுநரை பதவி விலக்கும் நோக்கம் எமக்கு இல்லை

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை அந்த பதவியிலிருந்து நீக்கும் எந்த நோக்கமும் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபைக்கு அறிவித்தார்.

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநரை முன்னாள் ஜனாதிபதியே நியமித்தார். அவரது பதவிக்காலத்தை தற்போதைய ஜனாதிபதி நீடித்தார். எனினும் மத்திய வங்கியின் ஆளுநரை பதவியிலிருந்து அரசாங்கம் நீக்க முயல்வதாக எதிர்க்கட்சி பிரசாரம் செய்கிறது. உண்மையில் எதிர்க்கட்சிக்கு அதுபோன்ற நோக்கங்கள் இருக்கிறதா என்பது தெரியவில்லை என்றார்.

# அது எப்படி பாடுமய்யா? அது எப்படி ஆடுமய்யா?

## சபையில் பாடல் பாடிய வடிவேல் எம்.பி



மலையக மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி மனிதாபிமானமாக நடத்த வேண்டும். பெருந்தோட்ட நிறுவனங்களிடம் மலையக மக்களின் வாழ்க்கையை கையளிப்பதற்கு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், மலையக மக்களுக்காக சபையில் பாடல் ஒன்றையும் பாடிக்காட்டினார்.

இலங்கையில் மலையகத்தில் தான் மந்தபோசனை அதிகளவில் இருக்கிறது. சத்துணவு திட்டமும் மலையகத்தில் மந்த கதியிலேயே உள்ளது. பெருந்தோட்ட நிர்வாகங்களின் அடாவடித்தனங்களால் மலையகக் கர்ப்பிணிப் பெண்கள் அங்கவீனமுற்ற குழந்தைகளை பிரசவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மந்த போசனையில் இருந்து மலையகத்தை மீட்க புதிய நடைமுறையை அரசாங்கம் அமல்ப்படுத்த வேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும். மயில பிடிச்சு கால உடைச்சி அட சொல்லுகிற உலகம், குயில பிடிச்சு கூண்டில் அடச்சி கூவ சொல்லுகிற உலகம். அது எப்படி பாடுமய்யா, அது எப்படி ஆடுமய்யா எனவும் பாடல் பாடினார்.

சக்கர நாட்காளிக்கு தடை என்றால்

# மாற்றுத்திறனாளிகள் தவழ்ந்தா செல்வார்கள்?



பா.நிரோஸ்

மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாட்காளிகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடைவிதிக்கப்போவதாக அரசாங்கம் கூறுவதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், சக்கர நாட்காளிகள் இல்லாது மாற்றுத்திறனாளிகள் தவழ்ந்தா செல்வார்கள்? எனவும் கேள்வி எழுப்பினார். இது கூடவா அரசாங்கத்துக்கு தெரியாது என கேள்வி எழுப்பிய முஜிபூர் எம்.பி, இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு உரையாற்றுவதற்குக் கூட சபாநாயகர் தமக்கு அனுமதி வழங்குவதில்லை எனவும் தெரிவித்தார்.

தேவை

கொள்ளுப்பிட்டியில் உள்ள வீட்டுக்கு, வீட்டை துப்புரவு செய்து, உணவுத் தயாரிக்கக்கூடிய 50 வயதுக்கும் மேற்பட்ட ஆண்ணொருவர் தேவை. தொடர்புகளுக்கு 0713 385788

# எரிபொருளை பெறுவதில் சிக்கல்

ரஷ்யா நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் சாதகமான, பாதகமான காரணங்கள் இருப்பதாக தெரிவித்த மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, எரிபொருளை இறக்குமதி செய்யும்போது இலங்கைப் பின்பற்றும் வழிமுறைகளுக்கு அமைய ரஷ்ய நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளவதில் சிக்கல் எனவும் தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதிக்காக வெளிநாட்டு நாணய கையிருப்பு



குறைவடைந்துள்ளமையே எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொது போக்குவரத்து மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய அத்தியாவிய சேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றுக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

தற்போது வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு போதுமானது அல்ல என்பதனை புரிந்துகொள்கின்றோம். ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலையில் நெருக்கடிகள் குறைவடைந்த பின்னர் இதில் மாற்றங்களை மேற்கொண்டு விநியோகிக்கப்படும் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.




பொது மக்களுக்கான அறிவித்தல்

இந்த புகைப்படத்தில் காணப்படும் **முகம்மது ராபி சல்மான் உல்ஷஸ்ரான்** என்பவர் **2022 ஆகஸ்ட் மாதம் 20 ஆம்** திகதியில் இருந்து Standard Holdings (Pvt) Ltd என்ற நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதுடன் மேற் குறிப்பிட்ட திகதிக்கு பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது என்பதனை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

இது தொடர்பான விசாரணைகள் அல்லது மேலதிக விபரங்களைத் தெரிந்துக்கொள்ள **0112672855/0114 422244** என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Standard Holdings

Smart Pack PACK YOUR FOOD SMARTLY


# விசேட பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்பு அவசியம்

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டமூல வரைபு அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணற்றதாக காணப்பட்டாலும், ஒரு சில ஏற்பாடுகளை நிறைவேற்ற விசேட பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்பை நடத்துவதும் அவசியம் என்ற உயர்நீதிமன்றின் வியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) சபாநாயகர் அறிவிப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார், இந்த சட்டமூலமானது அரசியலமைப்பின் பிரிவு 82(1) இன் விதிகளுக்கு இணங்குகிறது. எனினும் அரசியலமைப்பின் 82 (5) ல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. சட்டமூலத்தான் பிரிவு 2, அரசியலமைப்பின் 4(பி) உடன் இணைக்கப்பட்ட பிரிவு



3 க்கு முரணான விதிகளைக் கொண்டுள்ளது, அத்துடன் இது பிரிவு 82(5) இன் விசேட பெரும்பான்மையால் மட்டுமே இயற்றப்படலாம் என்பதுடன் பொதுவாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்பாடல் வேண்டும் என்பது பிரிவு 83 உறுதிப்படுத்துகின்றது. எனினும், உப பிரிவு 2ல் உள்ள முன்மொழியப்பட்ட பிரிவுகள் 41A(6), 41B(4) ஆகியவை அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதியை நீக்குவதற்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டால், பொதுவாக்கெடுப்பு அவசியமற்றதாகும்.

எவ்வாறாயினும், (அ) முன்மொழியப்பட்ட பிரிவு 44(2), விதி 44(3), சரத்து 45(1), 46(1), 47(3)(அ) சரத்து 3 இல் உள்ள 48(3) மற்றும் 50 ஆகியவை ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் செயல்படும் குறிப்பை நீக்குவதன் மூலம் பொருத்தமான முறையில் திருத்தப்பட்டால் பொதுவாக்கெடுப்பின் அவசியம் ஏற்படாது. (ஆ) சரத்து 3 இல் உள்ள உத்தேச உறுப்பு 47(2) இல் 47(2)(a) இன் விதிகள் உறுதிப்படுத்தப்பட்டால், உயர் நீதிமன்றத்தின் இன்றைய நடவடிக்கைகளின் பாராளுமன்ற ஒழுங்கு முறைமைகளில் அச்சிடப்பட வேண்டும் என சாபாநாயகர் அறிவித்தார்.

# அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்

ஒன்பது அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (06) பாராளுமன்றத்தில் அறிவித்தார் அதற்கமைய, பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைககுழு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.




### கோதுமை மாவுக்கான விலை அதிகரிப்பு

# வெதுப்பகங்களுக்கு பூட்டு

தீஷான் அஹமட்


திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த வெதுப்பக உரிமையாளர்கள் நேற்று (06) தமது வெதுப்பகங்களை மூடியுள்ளதோடு, இன்றும் (07) வெதுப்பகங்களை மூடி, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

கோதுமை மாவுக்கான விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு, நிர்ணய விலைக்கு கோதுமை மா விற்பனை செய்யப்படாமல், பல்வேறு விலைகளின் மா விற்பனை செய்யப்படுகின்றமை போன்ற காரணங்களை முன்வத்து, இவற்றுக்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தியுமே, தோப்பூர் பகுதி வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன.



பொதுமக்களுக்கு சரியான முறையில் வெதுப்பக உணவுகளை வழங்க முடியாதுள்ளதாகவும் கடை வாடகைகளைக் கட்டுவதற்கும் சிரமப்படுவதாகவும் வெதுப்பக உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது விடயத்தில் அரசாங்கமும் உரிய அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொண்டு, கோதுமை மாவுக்கான விலையை குறைத்துத் தருவதோடு, கோதுமை மாவை சரியான விலைக்கு விற்பனை செய்ய வியாபாரிகள் ஆவன செய்ய வேண்டுமெனவும் தோப்பூர் பிரதேச வெதுப்பக உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



### போதைப் பொருட்களை

## கட்டுப்படுத்துவதற்கான மீளாய்வுக் கூட்டம்

எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வுக் கூட்டம், மட்டக்களப்பு மாவட்ட உதவி செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், கடமைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

போதைப்பொருள் பாவனையின் தாக்கத்தை எமது பிரதேசங்களில் குறைப்பதற்கும் அதிலிருந்து இளைய சமுதாயம் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை முன்னெடுப்பது மற்றும் எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட போதைப்பொருள் கட்டுப்பாட்டு இணைப்பாளர் ப.தினேஷ், மாவட்ட உளவளவாளர் ஜனார்தனி நரசிம்மன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



### இறக்காமத்துக்கான மின்சார சபை

## உப அலுவலகம் அமைக்க முயற்சி

நூருல் ஹுதா உமர்

இறக்காமம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மின்சார சபையின் உப அலுவலகம் இன்மையால், மின்சார சபையின் உச்சபட்ச சேவையை பெற்றுக்கொள்வதில் பாவனையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக, முன்னறிவித்தலற்ற மின் தடை, திருத்த வேலைகளுக்கான காலதாமதம், மின் பாவனையாளர்களின் முறைப்பாடுகளை கவனத்தில்கொள்ளாமை, காலதாமதமான சேவை போன்ற பல பிரச்சினைகளை பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இறக்காமம் பிரதேசத்துக்கு தனியான மின்சார சபை உப அலுவலகத்தை அமைப்பது தொடர்பாகவும் பொதுமக்களுக்கு மின்சார சபையின் சேவையை சிறந்த முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலான உயர்மட்டக் கலந்துரையாடல், அம்பாறை பிராந்திய பிரதம பொறியியலாளர் காரியாலத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

அம்பாறை பிராந்திய பிரதம பொறியியலாளர் எம்.ஆர்.எம். பர்ஹான், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர் தலைமையிலான குழுவினருக்கு இடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது விடயங்களை கேட்டறிந்த பிரதம பொறியியலாளர் பர்ஹான், மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்துவதாகவும் பிரதேசத்துக்கான தனியான மின்சார சபை உப அலுவலகத்தை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், மின் பாவனையாளர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் மின்சார சபையின் சேவைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.



## குளத்தடி பிள்ளையார் மகாகும்பாபிஷேகம்

சகா

அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தை தம்பிநாயகபுரம் ஸ்ரீ குளத்தடிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (09) காலை 7.30க்கு நடைபெற இருக்கின்றது.

அதற்கான கிரியைகள் யாவும், இன்று புதன்கிழமை (07) ஆரம்பமாகின்றன. நாளை வியாழக்கிழமை (08) எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறவுள்ளது.

கோவில் பிரதம குரு சிவஸ்ரீ புண்ய கிருஷ்ணகுமாரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது .

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டல அபிஷேக பூசைகள், எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக நடைபெற்று, இறுதியில் 21ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பாற்குட பவனி, 21ஆம் திகதி காலை திருவள்ளுவர்புரம் மகாவிஷ்ணு கோவிலில் இருந்து பவனிவர இருப்பதாக கோவில் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.



## கிழக்கு பாடசாலைகளுக்கு சீனாவின் அன்பளிப்பு

ஹஸ்பர்

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தும் நோக்கில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 'ஸ்மாட் போர்ட்' விநியோகம், திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி.ஷென்ஹோன், ஆளுநரிடம் 'ஸ்மாட் போர்ட்'களை வழங்கியதை அடுத்து, கிழக்கு மாகாணத்தின் 17 கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய 20 பாடசாலைகளுக்கு தலா ஒரு 'ஸ்மாட் போர்ட்' வழங்கப்பட்டது.



அங்கு ஆளுநரும் சீனத் தூதுவரும் உரிய 'ஸ்மாட் போர்ட்'ஐ அந்தந்தக் கல்லூரிகளின் அதிபர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

ஆளுநர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, சீனத் தூதுவர் இந்த 'ஸ்மாட் போர்ட்'களை மிகக் குறுகிய காலத்தில் வழங்கியுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் சூரிய சக்தியில் இயங்கும் மின் விளக்குகளை பொருத்துவதற்கான ஒப்பந்தமும் இங்கு கைச்சாத்திடப்பட்டது. கிழக்கு மாகாண சபையும் சீனாவின் யுன்னான் வர்த்தக சங்கமும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.



### ஐ.நா சபையில் கூறிய கூற்றை ஜனாதிபதி

# மறுத்து நடப்பதை ஏற்க முடியாது

### செல்வம் எம்.பி தெரிவிப்பு

க.அகரன்

ஐ.நா சபையில் கூறி வந்த கூற்றை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது மறுத்து நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில், தற்போதைய ஜனாதிபதி, நல்லாட்சி அரசாங்கத்தில் ஐ.நா சபையிடம் பல கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதில் ஒன்று, பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதாகும். அதே பிரதமர் இப்போது ஜனாதிபதியாக வந்திருக்கின்ற சூழலில், அவர் கொடுத்த வாக்குறுதி மறுக்கப்பட்டிருக்கிறது.



"மீண்டும் பயங்கரவாத தடை சட்டத்தை ஜனாதிபதி கையில் எடுத்திருக்கிறார். ஆகவே, ஐ.நாவுக்கு ஒன்று கூறுவதும், வெளியே ஒன்றைச் செய்வதுமாக இருக்கின்ற சூழலை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

"தேசிய பாதுகாப்பு சட்டம் என்பதும், பயங்கரவாத தடைச்சட்டமும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று கூறுவது, மோசமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

"ஆகவே, பிரதமராக இருந்து ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா சபையில் கூறி வந்த அந்தக் கூற்றை, இப்போது மறுத்து நடக்கின்ற செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. கூறிய வார்த்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். என்னை பொறுத்தமட்டில், சட்டங்கள் மாறுகின்றன; எல்லாம் பயங்கரவாத தடை சட்டத்தின் அடிப்படையாகத்தான் வரும்.

"தமிழ் மக்களை, தமிழ் இனத்தை, ஏன் இலங்கை நாட்டையே குட்டிச்சுவராக்கிய மஹிந்த குடும்பத்தை காப்பாற்றுகின்ற ஒரு செயற்பாட்டையே தற்போதைய ஜனாதிபதி செய்து கொண்டு இருப்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.

"மஹிந்த குடும்பத்தை எதிர்க்கின்ற வகையிலேதான் மக்கள் போராட்டம் இருந்தது. ஆனால், இப்போது மேற்படி சட்டங்களின் ஊடாகப் போராடியவர்களை கைது செய்து, சிறையிலே அடைப்பது என்பது மஹிந்த குடும்பத்தை காப்பாற்றுகின்ற ஒரு செயற்பாடாகத்தான் சந்தேகம் எழுகிறது" என்றார்.











## தீப பூசை உற்சவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தின் 5ஆம் நாள் திருவிழாவான தீப பூசை உற்சவம் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

(படங்கள்: சண்முகம் தவசீலன்)

### கஞ்சா கைப்பற்றல்;

## கிளாலியில் இருவர் கைது

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் இன்று (06) அதிகாலை 37 கிலோவும் 700 கிராமும் நிறையுடைய கஞ்சா, கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து, இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே, குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற நடவடிக்கைக்கு முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



### அனுமதிப்பத்திரங்களில் மோசடி

## மணல் டிப்பர் சாரதிகள் எண்மர் கைது

வி.நிதர்ஷன்

அனுமதிப் பத்திரங்களில் மோசடி செய்து மணல் ஏற்றிச் சென்ற எட்டு டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், அதன் சாரதிகள் எண்மரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (06) காலை, யாழ்ப்பாணம் - கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனங்களை கைதடி பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்டபோதே, இந்த மோசடி தெரிய வந்தது.

அதனை அடுத்து குறித்த டிப்பர் வாகனங்களை கைப்பற்றிய சாவகச்சேரி பொலிஸார், அனுமதிப் பத்திரங்களில் மோசடி செய்த குற்றத்தில் சாரதிகளை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகளையும், கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





### உள்ளூர் உற்பத்தியை பெருக்கினால்

## தேசத்தை மாற்றலாம்



க.அகரன்

உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதன் மூலமாகவே எங்கள் தேசத்தை மாற்றிக்கொள்ள முடியுமென வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் செ.சிறீதரன் தெரிவித்தார்.

வவுனியா விவசாய சம்மேளன அலுவலகத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எங்களது நாடு மிக மோசமான நிலைக்கு சென்றுவிட்டது. இதனை மீட்பதற்காக ஜனாதிபதியால் 50 திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் விவசாயிகளுக்கு முக்கியமானதாக காணிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல், வனவளத் திணைக்களத்தில் இருந்து காணிகளை விடுவித்தல் என்பவையாகும்.

"குறிப்பாக, இவ் இரண்டு விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பாராளுமன்ற உறுப்பினர் திலீபனின் பிரசன்னத்துடன் சம்மந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

"கடந்த 30 வருடங்களுக்கு முன் உழுந்து உற்பத்தியில் வவுனியா மாவட்டம் 40 சதவீதமான உற்பத்தியை மேற்கொண்டது. இன்று காணிகள் முழுவதும் வன இலாகாவிடம் உள்ளன. இவ்வாறு இருப்பின் எவ்வாறு உற்பத்தியை செய்ய முடியும்?

"ஜனாதிபதியின் 50 திட்டங்களிலே எமக்குரிய காணிகளுக்கான அனுமதிப் பத்திரத்தைத் தருவதன் மூலமாக நாங்கள் வன இலாகாவினரிடம் இருந்து தப்பிக்கொள்ள முடியும்.

"மேட்டுநிலம், வயல், கால்நடை மூன்றும் செய்து கொண்டிருக்கின்றோம். வன இலாகா விட்டால் இவர்கள் நடும் மரத்துக்கு பதிலாக தென்னை மரங்களை நட்டு, வன இலாகைவை விட பெரிய வேலைகளை செய்து காட்டுவோம்" என்றார்.

# சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

எஸ். கே. குமார்

நுவரெலியா ஐக்கிய மதங்களின் ஒன்றியம், மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளின் அமலாக்கத்துக்கான சர்வதேச செயலணிப்படை அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து, நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் உள்ள கிராமங்களில் வாழும் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 80 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பிரித்தானிய நாட்டை சேர்ந்த மிஸ்தார் அணிஸ் என்ற செல்வந்தரின் அனுசரணையுடன் நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (06)செவ்வாய்கிழமை நடைபெற்ற இவ்வைபவத்தில், நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச். ஏ. பிரேமலால், நுவரெலியா பொலிஸ் சிறுவர் பாதுகாப்பு



பொறுப்பதிகாரி ஆர். எம். பி. யூ கௌசல்யா ராஜபக்ஷ, நுவரெலியா சர்வோதய தலைவர் திருமதி ஜியானி தல்வத்த, நுவரெலியா ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தின் தலைவர் எம். எஸ். எம் ஜிப்ரி, ஒன்றியத்தின் உறுப்பினரும் நுவரெலியா மாநகர சபை உறுப்பினருமான திருமதி திலினி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தின் போது, இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பித்து 156 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு, நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு ஞாபகார்த்த சின்னமும் வழங்கப்பட்டது.



குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு

# கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன

என்.ஆராச்சி

கேகாலை பிரதேச சபைக்கு உட்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள், மலசலகூட உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, கேகாலை பிரதேச சபை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது குறைந்த வருமானம் பெறும் 14 பேருக்கு கூரைத் தகடுகளும் 20 பேருக்கு மலசலகூடம் அமைப்பதற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவிக்காக பிரதேச சபையின் நிதியிலிருந்து 8 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கேகாலை பிரதேச சபையால் பிரதேச பெண்களுக்கான ஆடை, பைகள் தயாரிப்பு வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களின் உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரிய, பிரதேச சபை அதிகாரிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தொடரும் சீரற்ற வானிலை

# பல பிரதேசங்கள் பாதிப்பு

**மூன்று நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன**
**ஒருவர் பலி; பலரும் நிர்க்கதி**
**பாடசாலை கட்டடம் ஒன்றும் ஆபத்தில்**
**பல வீதிகளில் போக்குவரத்து முடக்கம்**

மலையக நிருபர்கள்

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, பல அனர்த்தங்கள் பதிவாகியுள்ளதுடன், பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, மேல் கொத்மலை, லக்ஸபான, கெனியன் ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று (06) காலை தொடக்கம் திறக்கப்பட்டுள்ளன.

லக்ஸபான நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும் கெனியன் நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவும், மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவும் திறக்கப்பட்டன என, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார்.

மேலும், காசல்ரீ, மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கெனியன், லக்ஸபான, புதிய லக்ஸபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் நீர்மின் நிலைய பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

இதேவளை, நுவரெலியா - மீலிமான பிரதான வீதியின் ரூவான்எலிய பகுதியில் மணசரிவு ஏற்பட்டதால் இவ்வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

அதேபோல் கடந்த வருடம் மண்சரிவு ஆபத்தை எதிர்நோக்கிய கடுகண்ணாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (05) மாலை மீண்டும் மண்சரிவு ஏற்பட்டது.

கண்டி- கொழும்பு பிரதான வீதியில் கடுகண்ணாவை பகுதியில் பாரிய கற்கள் சரிந்து வீதியில் விழுந்தமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அத்துடன், கண்டி, தவுலகல, யாலேகம பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 39 வயதுடைய நபர் உயிரிழந்தாக தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் வீட்டில் உள்ள மீன் தொட்டியில் உணவு வைக்க வந்த போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கலஹா, ஸ்ரீ சண்முகா ஆரம்ப பாடசாலை கட்டடம் மண்சரிவு எச்சரிக்கைக்கு உள்ளாகியுள்ளது. குறித்த பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டடத்தின் பின்புறம் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று (06) காலை தரம் 1-5 வரை வகுப்பு மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

மேலும், இந்த விடயம் தொடர்பில், கண்டி கோட்ட கல்வி அதிகாரிகளுக்கு தெரிவித்ததையடுத்து, பணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டுள்ளார்.

கேகாலை மாவட்டத்தில், அவிசாவளை - கேகாலை பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியதுடன்









அங்குருவெல்ல, ருவன்வெல்ல நகரங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அங்குருவெல்ல நகரம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதுடன் இதனை அண்டிய கன்னந்தொட்டை, அங்குருவெல்ல, ருவன்வெல்ல பிரதேச மக்கள் பாதிப்புகளை சந்தித்துள்ளனர்.

அத்தோடு, தேசிய கட்டட ஆய்வு மய்யத்தால் யட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, கேகாலை, கலிகமுவ, மாவனல்லை, ரம்புக்கன, வரக்காப்பொல பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 493 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் 442,442 குடும்பங்கள் தெஹியோவிட்ட, ருவன்வெல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.







# உபகரணங்கள் கையளிப்பு

மலையகத்தில் பல்வேறான சமூக நல செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் 'மலையகம் எமது தாயகம் சமூக நல அமைப்பின்' 139ஆவது வேலைத்திட்டமாக, மொனராகலை, சிறிகல சரஸ்வதி தமிழ் வித்தியால மாணவர்களுக்கு தேவையான கரப்பந்தாட்ட உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கலந்துகொண்டனர். (சு. சுரேந்திரன்)

இராமகிருஷ்ணா இந்து கல்லூரியிலிருந்து

# மாணவர்கள் பலரும் பல்கலைக்கழகம் செல்ல தகுதி

சு.சுரேந்திரன்

2021ஆம் வருடத்திற்கான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட லுனுகலை இராமகிருஷ்ணா இந்து கல்லூரி கலை பிரிவில் மூன்று மாணவர்கள் மூன்று ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

மேலும் பல மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இப்பாடசாலையில் முதல் தடவையாக கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய ஒன்பது மாணவர்களில் எட்டு பேர் சிறப்பான சித்திகளை பெற்றுள்ளதோடு கலைத்துறையில் 77% சித்தியையும் விஞ்ஞானத்துறையில் 44% சித்தியையும் வணிகத்துறையில் 66% சித்தியையும் உயிரியல் தொழில் நுட்ப துறையில் 100 % சித்தியையும் பெற்று பசறை கல்வி வலயத்தில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறிவுக்களஞ்சியத்தின் முதலாவது சுற்றுப்போட்டி

ஜலீல்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான அறிவுக்களஞ்சியம் முதலாவது சுற்றுப்போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி, 9.00 மணிக்கு கலாவெவ முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, தெமட்டகொட புத்தக நிலைய அனுசரணையில் நடத்தப்படவுள்ள இந்நிகழ்ச்சியில், அநுராதபுர மாவட்டத்திலிருந்து 12 பாடசாலைகள் பங்குபற்ற இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்தில், நிகழ்ச்சி நடத்தப்படும் பாடசாலைக்கு சமூகமளிக்குமாறும் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் ஏ.எம்.எம் ரலீம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பொலிஸ் நடமாடும் சேவை

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பொலிஸ் தலைமையகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொலிஸ் நடமாடும் சேவை, எதிர்வரும் 10ஆம் திகதி, காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

உக்குவளை அஜ்மீர் வித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட உள்ளதென மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரியில்

# 8 மாதங்களில் 350 டெங்கு நோயாளர்கள்

சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இவ்வருடம் ஆரம்பத்திலிருந்து கடந்த எட்டு மாத காலத்தில், டெங்கு நோயாளர்கள் 350 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என, இரத்தினபுரி மாநகர சபையின் பிரதான பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.எம்.யூ.பி சமரசேகர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றைய தினம்(5) கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இரத்தினபுரி மாநகர சபைக்கு உட்பட்ட 15 பிரதேசங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகிவுள்ளனர். இதில் முவகமுவ, இரத்தினபுரி நகரின் வடக்கு ஆகிய இரு பிரதேசங்களில் கூடுதலான டெங்கு நோயாளர்கள் பதிவாகி உள்ளனர்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை டெங்கு நோயாளர்கள் 84 பேர் மாத்திரமே பதிவாகி இருந்த நிலையில், 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரை எட்டு மாத காலத்தில் 350 டெங்கு நோயாளர்கள் பதிவாகி உள்ளனர்.

இரத்தினபுரி பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாவும் மற்றும் அடிக்கடி இப்பிரதேசங்களில் வெள்ளம் ஏற்படுவதன் காரணத்தாலும் டெங்கு நோய் அதிகரித்து வருகின்றது.

டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக இரத்தினபுரி மாநகர சபை மேயர் டிரோன் அத்தநாயக்கவின் ஆலோசனைக்கமைய, வீடுகள், பொது இடங்களுக்குச் சென்று மக்களை தெளிவுபடுத்தி, டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மீபிலிமான மண் சரிவால் போக்குவரத்து பாதிப்பு



எஸ். கே. குமார்

நுவரெலியா - மீலிமான பிரதான வீதியின் ரூவான்எலிய பகுதியில் நேற்று (06) செவ்வாய்கிழமை மண் சரிவு ஏற்பட்டதில் இவ்வீதியூடான போக்குவரத்து பல மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன.

இதன் காரணமாக நுவரெலியா, மீபிலிமான, ஒட்டன் பிளேஸ் சமவெளி, உலக முடிவு, அம்பேவளைக்கான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

நீண்ட நேர சிரமத்தின் பின்னர் நுவரெலியா பொலிஸார், நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், இராணுவத்தினர் இணைந்து மண்மேட்டை அகற்றி இவ்வீதியின் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டு வந்தனர்.

இவ்வீதியோரங்களில் பல இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் இவ்வீதியில் பயணிக்கும் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

# டயகமவில் நடமாடும் சேவை

துவாரகஷன்

டயகம பிரதேசத்தில் அதிகமானவர்கள் இன்னும் சிவில் ஆவணங்கள் இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதை கருத்தில்கொண்டு, நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக பிறப்பு, இறப்பு, திருமணம் சான்றிதழ் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இப்பிரதேசத்தில் உள்ளதுடன், அடையாள அட்டை, பெயர் மாற்றம் செய்தல், காணி உரிமப் பத்திரம் போன்ற சான்றிதழ்களை வழங்கும் வகையில், 156 ஆவது பொலிஸ் தினத்தையொட்டி, டயகம பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை டயகம சிங்கள மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இதில் டயகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சந்திரிகாமம், டயகம ஈஸ்ட், வெவரலி, டயகம டவுன் ஆகிய கிராமசேவகர் பிரிவில் உள்ளவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் ஆவணங்களை பெற்றுக்கொள்ள வரும் நபர்கள் தேவையான தகவல்களை கொண்டு வரவேண்டுமென டயகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கே. எட்டியாராய்ச்சி கேட்டுக்கொண்டுள்ளார்.

கெந்தகொளையில் வெடி பொருட்களுடன்

# இளைஞர் கைது

ராமு தனராஜா

பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெந்தகொல்ல பகுதியில் சட்ட விரோதமான முறையில் வெடிபொருட்களை வைத்திருந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, பதுளை குற்றத்தடுப்பு பொலிஸாரும் பதுளை விசேட பொலிஸ் பிரிவினரும் இணைந்து சந்தேகநபரின் வீட்டை சுற்றிவளைத்தனர்.

இதன்போது மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த டெட்டனேட்டர் 5, ஜெலட்டின் குச்சிகள் 3, 6 மீற்றர் வயரும் அமோனியம் 2 கிலோ 630 கிராமும் வெடிமருந்து 967 கிராமும் கஞ்சா போதைப் பொருள் 10 கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் 29 வயதுடையவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை பதுளை



நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

# விரலுக்கேற்ற வீக்கத்தைப் போல வாழப்பழகிக் கொள்ள வேண்டும்

வாழ்க்கைச் செலவு விண்ணைத் தொட்டுள்ள நிலையில், மக்கள் தமது நாளாந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குக்கூட பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நிலைமை, இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீண்டு செல்லுமென எதிர்வுகூற முடியாதுள்ளது.

உணவுப் பொருட்கள் முதல் ஆடைகள், போக்குவரத்து, மின்சாரம், நீர், தொலைபேசி, இணையம் என அனைத்து வசதிகளுக்குமான கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், பல குடும்பங்களின் குடும்ப வருமானம் குறைவடைந்துள்ளது. குறிப்பாக, மாதாந்த சம்பளம் பெறுவோரின், மேலதிக கொடுப்பனவுகள், மேலதிகநேர கொடுப்பனவுகள், தரகு போன்ற ஊக்குவிப்பு மற்றும் சலுகைக் கொடுப்பனவுகள் பெருமளவில் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. ஏனெனில், அவர்கள் பணிபுரியும் வியாபார, வணிக நிறுவனங்கள்கூட நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னர், பல குடும்பங்களில் நிலவிய வருமான மட்டம் தற்போது இல்லை. இதனால், குடும்ப செலவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. அவசியமான செலவுகளைக்கூட, கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் பலருக்கு எழுந்துள்ளது.

குறிப்பாக, குடும்ப விநோத அம்சங்கள், திரையரங்குகளுக்கு செல்வது, வார இறுதியில் தூரப் பயணம் செல்வது, குடும்ப சுற்றுலா, உணவகங்களுக்கு செல்வது போன்ற பல விடயங்களை தவிர்க்கும் நிலையை பல குடும்பங்கள் எதிர்கொண்டுள்ளன.

சேமிப்பு என்பது மிகவும் முக்கியமானது என்பதை, நாம் பள்ளிப் பருவம் முதலே பயின்று வருகின்றோம். நாடு இன்றைய நெருக்கடி நிலைக்கு முகங்கொடுப்பதற்கும் நாட்டில் அந்நியச் செலாவணி சேமிப்பு இன்மையும் ஒரு காரணம் எனக்கூறினால் அது தவறில்லை.

இந்நிலையில், தமது மாத வருமானத்தில் ஒரு பகுதியை சேமிப்பில் இட்டவர்கள், தற்போது அதைத் தவிர்த்து வருவதுடன், அவர்கள் சேமித்த தொகையிலிருந்து, தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, அவற்றைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகியுள்ளனர்.

மொத்தத்தில் ரூபாயின் மதிப்பு என்பது பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. விலை அதிகரிப்புக்கு ஆளாவதை தற்காலிகமாக தவிர்க்கும் வகையில், மக்கள் சுப்பர் மார்கெட்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருட்களில் பழைய கையிருப்புகளை தேடி வாங்குவதை பெருமளவில் அவதானிக்க முடிகின்றது. ஊர் கடைகளில், பழைய விலைகளின் மீது, புதிய விலைகளை எழுதி ஒட்டி, அல்லது அச்சிட்டு ஒட்டி விலைகளை அதிகரித்து விற்பதால் அதன் பயன் அம்மக்களுக்கு கிடைப்பதில்லை.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரிக்கையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதாக காரணம் காண்பித்து சில மடங்கேனும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான செலவுகள் அதிகரித்து, வருமானம் குறைவடைந்துள்ள சூழலில், விரலுக்கேற்ற வீக்கத்தைப் போன்று, வருமானத்துக்கேற்ப நாளாந்த செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதுடன், சேமிப்பையும் பொருத்தமான முதலீடுகளில் பேணி வருவது காலத்தின் தேவையாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கெட்டவர்கள், நல்லவற்றை வெறுக்கிறார்கள்; நல்லவர்கள், தங்களையே அர்ப்பணிக்கிறார்கள். அன்பு, இரக்கம், கொடை என்பன இல்லாதவர்களுக்கு வெறுப்பு, காழ்ப்பு, தீங்கு செய்யும் உணர்வுகள் இறுகப்பற்றி நிற்கின்றன. ஒருவர் கொடுப்பதை, இத்தகையவர்கள் தடுக்க முயல்கிறார்கள்.

இத்தகையவர்கள் மகிழ்ச்சியே இல்லாத வாழ்க்கையை, தாங்களாகவே ஏற்படுத்தி விடுகின்றார்கள். பொழுதுகளை வீணாக அழித்துக்கொண்டு துன்பத்தில் மூழ்குகிறார்கள்.

தானாகவே உருவாகும் திருப்தி நிலையை, எவராலும் பறித்துவிட முடியாது. அடிக்கடி தோற்பவர்கள் துஷ்டர்கள்தான். மகிழ்ச்சியின் உச்சமே, திருப்தி ஆகும். தனக்குத் தானே களிப்பை உருவாக்கத் தெரியாதவரால், பிறருக்கும் சந்தோசங்களைக் கொடுக்க முடியாது.

தன்னை மட்டுமே நோக்குபவர், எவரது உணர்வுகளையும் புரிந்து கொள்ள மாட்டார். நல்ல புத்திமதிகளை ஏற்காது விட்டால், மனநிம்மதி கெட்டு, கடுமையான எண்ணங்களுடன் அமைதியின்றி தத்தளித்தபடியே வாழ்வார்கள். துன்பங்கள் தொடரும் போதாவது, உண்மை நிலையை உணர்ந்தால், வாழ்வில் மாற்றங்கள் உருவாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலமுனையில் இயங்கிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தை மீள ஆரம்பிக்கவும்

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில், பாலமுனையில் இயங்கி வந்த இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தை, மீள ஆரம்பிக்குமாறு இளைஞர், யுவதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாலமுனை ஹூஸைனியா நகர் மீள்குடியேற்றத் திட்டத்தில் 16.05.1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தில், ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்தின் வெளிஇயந்திரம் திருத்துதல், தச்சுத் தொழில், வெல்டிங், வீட்டு மின்னினைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் போதிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மூடப்பட்டுள்ளது.

இளைஞர், யுவதிகள் தொழில்பயிற்சி கற்கை நெறியைப் பயில்வதில் ஆர்வம்காட்டி வருகின்ற இக்காலகட்டத்தில், இப்பயிற்சி நிலையம் மூடப்பட்டு, கட்டடங்கள் பாழடைந்துள்ள நிலையில், அங்கிருந்த உபகரணங்களும் அகற்றப்பட்டுள்ளன.

எனவே, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தொழிற்பயிற்சியை பயில்வதற்கு அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு ஆகிய கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையங்களுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பயிலுநர்கள் பல அசௌகரிகங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எம். எஸ். எம் ஹனீபா

# கொள்கை இல்லாத தெற்கு கூட்டணிகள்



எம். எஸ். எம் ஐயூப்

சிறுபான்மை மக்களின் உரிமைகளை மதிக்காத விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும் உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உருமயவும் சேர்ந்து, சிறுபான்மை மக்களின் உரிமைகளை நிராகரிக்காத சமசமாஜ கட்சியுடனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடனும் கூட்டணி அமைத்தால், அக்கூட்டணியின் கொள்கை எவ்வாறானதாக இருக்கலாம்?

இக்கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்தது மட்டுமல்ல, இவை மேலும் சில கட்சிகளுடனும் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமை (04) புதிய கூட்டணியை அமைத்துள்ளன. அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போது, மேடையில் கட்டப்பட்டிருந்த பதாகையில், அதன் பெயர் 'உத்தர லங்கா சபாகய' என்று சிங்களத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

தமது கூட்டணி, நாடு எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளுக்கு விடை தேடும் கூட்டணியே அன்றி, பிரச்சினைகளைக் கூறித் திரியும் கூட்டணியல்ல என்று விமல் வீரவன்ச, இந்தக் கூட்டத்துக்கு முன்னர் ஊடகங்களிடம் கூறினார்.

'விடை' என்பதற்கு அவர் 'உத்தர' என்ற சிங்கள சொல்லையே பாவித்தார். எனவே, அந்த அர்த்தத்தில் இந்தக் கூட்டணிக்கு 'உத்தர லங்கா சபாகய' என்று பெயர் வைத்தார்களோ தெரியாது. (சபாகய என்பது கூட்டு அல்லது கூட்டணி என்பதாகும்)

'உத்தர' என்ற சிங்கள சொல்லுக்கு, வேறு சில அர்த்தங்களும் இருக்கின்றன. 'உன்னதமான', 'வடக்கு' (Northern) என்பன அவையாகும். எனவே, சிலவேளை உன்னதமான என்ற அர்த்தத்திலும் புதிய கூட்டணிக்கு பெயர் வைத்திருக்கலாம். சிலவேளை, 'பிரச்சினைகளுக்கு விடை தேடும் உன்னதமான' என்ற இரண்டு அர்த்தங்களும் பிரதிபலிக்கும் வகையிலும் அந்தச் சொல்லை பாவித்து இருக்கலாம்.

எனினும், வீரவன்சவே அந்தக் கூட்டணியின் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். கம்மன்பில இரண்டாவது தலைவர் போல் இருக்கிறார். ஆகவே, இந்தக் கூட்டணி எவ்வகையிலும், சிறுபான்மை மக்களுக்கு உன்னதமான கூட்டணியாகப் போவதில்லைப் போல் தான் தெரிகிறது.

இதற்குப் புறம்பாக, கடந்த வாரஇறுதியில் மேலும் மூன்று தேர்தல் கூட்டணிகளுக்கு தென்பகுதியில் அடித்தளம் இடப்பட்டது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மீதான ராஜபக்ஷர்களின் கட்டுப்பாட்டை எதிர்க்கும் அக்கட்சியைச் சேர்ந்த டலஸ் அழகப்பெருமவின் தலைமையில், ஒரு கூட்டணி உருவாக இருக்கிறது.

ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, ராஜபக்ஷர்களின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்குப் போட்டியாக, டலஸ் அத்தேர்தலில் குதித்தார். அப்போது டலஸுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே, இந்தக் கூட்டணியை அமைக்கப் போகின்றனர். அது இப்போதைக்கு, கூட்டணியாகவன்றி பொதுஜன பெரமுனவின் மற்றொரு கோஷ்டியாகவே இருக்கிறது. ஆனால், அவர்கள் கூட்டணி அமைத்தே எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட உள்ளதாகக் கூறுகின்றனர்.

ஒகஸ்ட் 31 ஆம் திகதி, பாராளுமன்றத்தில் இவர்கள் ஆளும் கட்சி வரிசைகளில் இருந்து வெளியேறி, எதிர்க்கட்சி வரிசைகளில் அமர்ந்து கொண்டனர். இந்தக் குழுவினதும் கொள்கையைப் பற்றி, பலத்த சந்தேகம் எழுகிறது. தமிழீழ விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வைக் காண வேண்டும் என்று உடன்பாட்டுக்கு வந்த பேராசிரியர் ஜீ. எல் பீரிஸும் 2005ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷர்களின் சகல நடவடிக்கைகளையும் ஆதரித்த டலஸும் தான், இக்குழுவின் முன்னணித் தலைவர்களாக இருக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை (02) ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு 71 வருடங்கள் பூர்த்தியாகின. அதனை முன்னிட்டு, அக்கட்சியின் செயற்குழு மஹரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கூடியது. அதன்போது, தமது கட்சி, தேர்தல் கூட்டணியை அமைக்கப் போவதாக, கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இதனிடையே, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் புதிய அரசியல் கட்சியின் அலுவலகத்தை திங்கட்கிழமை (05) ஆரம்பித்தார். 'நவ லங்கா சுதந்திர கட்சி' என்பதுவே அவரது கட்சியின் பெயராகும். இது, 2020ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதன் பின்னால் இயங்குகின்றார்.

இவ்வனைத்துக் குழுக்களும் ஏப்ரல் மாதம் வரை, ராஜபக்ஷர்களின் தலைமையிலான ஆளும் கட்சியில் செயற்பட்டவர்கள் ஆவர். பல்வேறு காரணங்களுக்காக, பொதுஜன பெரமுனவுக்குள்ளேயே ஒதுக்கித் தள்ளப்பட்டதன் காரணமாகவே, இவர்கள் பெரமுனவில் இருந்து பிரிந்துள்ளனர்.

இந்த அரசியல் கூட்டுகள் எவற்றிலும் கொள்கை ரீதியான அடித்தளம் இல்லை. இவர்கள் மக்களை ஏமாற்ற, எதையும் செய்யக்கூடியவர்களாகவும் சொல்லக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலின் போது, அரசியல் அறிவே இல்லாத கோட்டாபயவை விமலும் கம்மன்பிலவும் 'மஹதிர் மொஹமட்' என்றும் 'லீ குவான் யூ' என்றும் அழைத்தனர். வறுமையில் மூழ்கியிருந்த மலேசியாவை, தென்கிழக்கு ஆசியாவில் பொருளாதார ஜாம்பவானாக மாற்றியவர் மஹதிர் தான். சேரிகள் நிறைந்த நாடாக இருந்த சிங்கப்பூரை தற்போதைய நிலைக்கு மாற்றியவர் லீ குவான் யூ ஆவார். ஆனால், விமலும் கம்மன்பிலவும் இலங்கையின் மஹதிராகவும் லீ குவான் யூவாகவும் அழைத்த கோட்டாபயதான், இலங்கையின் பொருளாதாரத்தை குட்டிச்சுவராக்கினார்.

விமல், கம்மன்பில ஆகியோருக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்படாவிட்டால், இவ்விருவரும் இன்னமும் பொதுஜன பெரமுனவிலேயே இருந்திருப்பர்.

மார்ச் மாதம், இவர்களை அமைச்சரவையில் இருந்து கோட்டாபய நீக்கிய பின்னரும், கோட்டாவின் தலைமையிலேயே சர்வகட்சி அரசாங்கம் அமைக்க முதன் முதலில் முயன்றவர்களும் இவர்களே! ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது, கோட்டாபயவின் சார்பில் இவர்கள் கடுமையாக இனவாதத்தைத் தூண்டினார்கள்.

இடதுசாரிகளாகவும் மாக்ஸியவாதிகளாகவும் தம்மை அழைத்துக் கொள்ளும் சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி கட்சியும் எந்த அடிப்படையில், இவர்களுடன் கூட்டு சேர்ந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது.

பொதுஜன பெரமுனவால் ஒதுக்கித் தள்ளப்பட்ட நிலையில், எதிர்வரும் தேர்தல்களின் போது, பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தையாவது கைப்பற்றிக் கொள்வதைத் தவிர, அவர்களிடம் வேறு நோக்கம் இருக்க முடியாது. எனினும், அதற்கும் விமல், கம்மன்பில ஆகியோரின் கட்சிகளுக்கு பெரிதாக வாக்குவங்கி இல்லை.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்க வருமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கூட்டுத் திட்டமொன்று இல்லாமல், கூட்டு சேர்வதில்லை என்றே விமலும் கம்மன்பிலவும் கூறினர். ஆனால், அவ்வாறு எந்தவொரு திட்டமும் கோட்டாவிடம் இல்லாத நிலையில், அவரது தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்க, முதன் முதலில் இவர்களே முன்வந்தனர். இவர்களது கட்சிகள் உள்ளிட்ட 11 கட்சிகளே, அந்த ஆலோசனையை கோட்டாவிடம் முன்வைத்தன.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டம் இல்லாமல், அதே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவென சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதில் அர்த்தம் இல்லை என்ற இவர்களது வாதம் சரியானதே! அவ்வாறாயின், இவர்கள் தற்போது அமைத்து இருக்கும் கூட்டணியும், அந்த அடிப்படையிலேயே அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான எந்தவொரு திட்டத்தையும் இவர்களும் முன்வைக்கவில்லை.

எனினும், இனங்களுக்கு இடையிலான உறவு விடயத்தில், இவர்களது கூட்டணியின் கொள்கை அறிக்கையில், சில நல்ல விடயங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. 'தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டும்; ஏனையோருக்கு இடையூறு விளைவிக்காமல், தமது மொழியை பாதுகாக்கவும் தமது மத நம்பிக்கைகளை பின்பற்றுவதற்கும் சகல சமூகங்களுக்கும் உரிமை இருக்க வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு குழுக்களின் தனித்துவ உரிமைகளும் நாட்டின் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படும் வகையில், பல்வேறு மட்டத்திலான ஜனநாயக அதிகார அலகுகளில், நடைமுறையில் மக்களின் இறைமை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், இவர்கள் அதிகாரப் பரவலாக்கலை குறிப்பிடுகிறார்களா? அவ்வாறாயின், அந்தளவுக்கு விமலும் கம்மன்பிலவும் மாறிவிட்டார்களா?

தமிழர்களையும் முஸ்லிம்களையும் வெகுவாகப் பாதித்த பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யவோ அல்லது, அதற்குப் பதிலாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை பரிந்துரைத்துள்ளபடி, சர்வதேச தரத்திலான சட்டம் ஒன்றைக் கொண்டுவர இவர்கள் தயாரா?

டலஸ் அழகப்பெருமவின் தலைமையிலான அமைப்பும், கொள்கை ரீதியில் பொதுஜன பெரமுனவைவிட்டுப் பிரிந்ததொன்றல்ல. டலஸின் மாவட்டமான மாத்தறைக்கு, மஹிந்த ராஜபக்ஷவின் தங்கையின் மகன் நிப்புன ரணவக்க, கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, டலஸை விடக்கூடுதலான வாக்குகளைப் பெற்றார். நிப்புனவை, ஹம்பாந்தோட்டையில் போட்டியில் நிறுத்தாமல், மாத்தறையில் நிறுத்தியமை, தம்மை ஓரங்கட்டும் முயற்சி என்பதை டலஸ் உணர்ந்து கொண்டார்.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து பசில், ஜீ. எல் பீரிஸை ஓரங்கட்ட ஆரம்பித்தார். அதன் காரணமாகவே, அவர் டலஸுடன் இணைந்து கொண்டார். இவர்களுடன் இணைந்திருக்கும் ஏனையவர்களும் அவ்வாறே ஒதுக்கப்பட்டவர்களாவர். எனவே, இதுவும் சந்தர்ப்பவாத கூட்டேயன்றி, கொள்கை அடிப்படையிலான ஒன்றல்ல.

பயங்கரவாத தடைச் சட்டத்தை, அரசியல் பழிவாங்கலுக்காக அரசாங்கம் பாவிப்பதாக ஜீ. எல் பீரிஸ் குற்றஞ்சாட்டினார். ஆனால், அவர் அமைச்சராக இருக்கும் போது இடம்பெற்ற அதுபோன்ற சம்பவங்களை, அவர் நியாயப்படுத்தினார்.

நாம் விவரிக்காவிட்டாலும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியைப் பற்றியும் நவ லங்கா சுதந்திர கட்சியைப் பற்றியும், அவற்றின் தலைவர்களின் வரலாற்றைப் பார்த்து, மக்கள் விளங்கிக் கொள்வர்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள் சில

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திங்கட்கிழமை (05) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில

## முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்

கல்விப் பிரிவின் ஒத்துழைப்புக்களுக்கான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி, இலங்கை சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் 'கீல்' பல்கலைக்கழகத்திற்கும் இடையில் முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகரித்துள்ளது.

## ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தம்

கற்கைத் தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி மற்றும் சீனாவின் ரியன்ஜீன் பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலைப் பாடசாலைக்கும் இடையில் வெளிவிவகார அமைச்சு, தேசிய வரவு செலவுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக, தயாரிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மீள்கட்டமைப்பு அலகொன்றை நிறுவுதல்

அரசுக்குச் சொந்தமான வணிக நடவடிக்கைகளின் செயலாற்றுகை நீண்டகாலமாக மகிழ்ச்சியடையக்கூடிய நிலைமையில் காணப்படாமையால், ஒருசில வர்த்தகங்கள் பல்வேறு காரணங்களால் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குகின்றது. இந்நிலைமை திறைசேரிக்குப் பாரியளவிலான அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றமையால், அவ்வாறான வர்த்தகங்களை வினைத்திறனாகவும் பயனுறு வகையிலும் மேற்கொண்டு செல்வதற்கான மாற்றுப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, திறைசேரி மீது சுமத்தப்பட்டுள்ள நிதிச்சுமையைக் குறைத்துக் கொள்வதற்கான முறைகளை அறிமுகப்படுத்துதல், அரசுக்குச் சொந்தமான வர்த்தகங்களின் முழுஅளவிலான செலாற்றுகையை அதிகரித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு அரச தொழில்முயற்சிகளை மீள்கட்டமைத்தல் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## முகவர் நிறுவனத்தை தாபித்தல்

இலங்கையில் முதலீடு செய்யும் போது முதலீட்டாளர்கள் முகங்கொடுக்கின்ற சிரமங்கள் மற்றும் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், அரச □ தனியார் பங்குடமைக் கருத்திட்டங்களை அடையாளங்கண்டு குறித்த நிலையான காலப்பகுதியில் அக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் அரச □ தனியார் பங்குடமை தேசிய முகவர் நிறுவனத்தைத் தாபிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 06.தேசிய போசாக்கு கொள்கை 2021-2030

மக்கள் ஆரோக்கியமான உணவு உட்கொள்வதற்கு அவகாசம் வழங்குகின்ற பாதுகாப்பான உணவுச் சூழல் இருத்தல் உள்ளிட்ட மக்களுடைய போசாக்கு நிலைமையை ஆரோக்கியமாகப் பேணிச் செல்வதற்கு தாக்கம் செலுத்துகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வுகளை வழங்கும் நோக்கில் 'தேசிய போசாக்கு கொள்கை 2021-2030' தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து இலங்கையர்களுக்குமான உயர்வான போசாக்கு எனும் தூரநோக்கு மற்றும் அதனை செயற்படுத்துவதற்கான மூலோபாய சட்டகத்துடன் குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 07.சுகாதாரப் பராமரிப்பு பிரதான திட்டம்

வீட்டுமட்ட திண்மக்கழிவுகள் மற்றும் மனிதக் கழிவுகள் அத்துடன், நிறுவன ரீதியான, வணிக மற்றும் தொழிற்சாலைகளில் திண்மக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கும், அவற்றைப் பாதுகாப்பாக சேகரித்தல், சுத்திகரித்தல், அகற்றல் மற்றும் அதுதொடர்பான சுகாதார நடைமுறைகள் பொதுச் சுகாதாரப் பராமரிப்புக்கள் எனக் கருதப்படும்.

ஐக்கிய நாடுகள் சபை அதன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் பற்றிய நிகழ்ச்சிநிரலில் பொதுச் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்குதல் நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமான தேவையாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொதுச் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்கு ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அனைத்துத் தரப்பினர்களும் ஒரு சட்டகத்திற்கு சரியான ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை கூடிய நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தும் வகையில் பொதுச் சுகாதாரப் பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 வரையான காலப்பகுதியை உள்ளடக்கியதாக குறித்த கொள்கை முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்காக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 08.'காபன் நடுநிலைப்படுத்தல்'

இலங்கை 2016 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஏற்று அங்கிகரித்துள்ள காலநிலை மாற்றங்கள் தொடர்பான பரிஸ் ஒப்பந்தத்திற்கமைய பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக எரிசக்தி, தொழிற்சாலைகள், போக்குவரத்து, திண்மக்கழிவு, வனங்கள் மற்றும் விவசாயத் துறைகளின் கீழ் தேசிய ரீதியாக நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புக்கள் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஜப்பான் 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ள 'காபன் நடுநிலைப்படுத்தல்' ஒருங்கிணைந்த பொறிமுறை மூலம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒருங்கிணைந்து, பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கும், அத்துடன் குறித்தளவில் குறைக்கப்பட்ட அளவை ஒப்பந்தங்களை மேற்கொண்ட நாடுகள் மற்றும் ஜப்பானுக்கும் இடையில் சதவீத அடிப்படையில் பகிர்ந்து கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த பொறிமுறையை இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் நடைமுறைப்படுத்துவதற்காக இருநாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 09.புரிந்துணர்வு ஒப்பந்தம்

தொழிலாளர் ஆட்சேர்ப்பு, தொழிலில் அமர்த்துதல் மற்றும் மீளவும் நாட்டுக்க அழைத்தல் தொடர்பாக மலேசியா அரசு மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2016 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் 2021 திசம்பர் மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. தொடர்ந்து குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் புரிந்துணர்வ ஒப்பந்தத்தை நீடித்து புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 10உள்ளூரில் விடுமுறை வழங்கல்

2022 ஜூன் மாதம் 13 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, சேவை மூப்புப் பாதிக்காத வகையில் அரச ஓய்வூதியதாரர்களுக்கு உள்ளூரில் விடுமுறை வழங்குவதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்காக சிரேஷ்ட அலுவலர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. குறித்த குழுவால் உயர்ந்தபட்சம் 05 வருடகாலம் வரைக்கும் சம்பளமற்ற விடுமுறை வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக கௌரவ பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 12.பல்துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறை

தொடர்ந்துவரும் காலங்களில் மோசமான உணவுப் பற்றாக்குறை மற்றும் பணவீக்கத்தால் விலைஅதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதால், அது உணவுப் பாதுகாப்பை மேலும் பாதிக்கும். சமகால பொருளாதார நெருக்கடிகளால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தல் மற்றும் குடும்ப வருமானங்களுக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கங்களால் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள் மேலும் மோசமடைந்துள்ளதுடன், உள்ளூர் பணஅலகில் ஏற்பட்ட வீழ்ச்சியடைந்துள்ளமையால் இறக்குமதி விநியோகங்களில் ஏற்பட்ட மட்டுப்பாடுகளால் உணவுப் பொருட்களின் விலையேற்றம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

அதற்கமைய, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்காக துரித படிமுறைகளாக அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கான குறுகியகால தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

புதுடெல்லி

மதச்சார்பற்ற நாட்டில் அரசுப்பள்ளியில்

# மத ரீதியிலான உடை அணியலாமா?

### ஹிஜாப் வழக்கில் உச்ச நீதிமன்றம் கேள்வி



கர்நாடக மாநிலம் உடுப்பி குந்தாப்புராவில் உள்ள அரசு பி.யூ.கல்லூரியில் மாணவ-மாணவிகள் சீருடை அணிந்து வர வேண்டுமென்று அந்த கல்லூரி நிர்வாகம் கடந்த பெப்ரவரி மாதம் கூறியது.

ஆனால், அந்த கல்லூரியில் பயின்று வந்த இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் சிலர் சீருடை மீது ஹிஜாப் (தலைப்பகுதியை மூடும் உடை) அணிந்து வந்தனர். இதற்கு அந்த கல்லூரி நிர்வாகம் தடை விதித்தது. அந்த தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமிய மதத்தை சேர்ந்த அந்த மாணவிகள் பர்தா (உடல் முழுவதும் மூடும் உடை) அணிந்து போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த கல்லூரியில் படிக்கும் இந்து மதத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் காவி துண்டு அணிந்து கல்லூரிக்கு வந்தனர். இதனை தொடர்ந்து பள்ளி, கல்லூரிகளில் மத அடையாளத்தை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்துவர தடை விதித்து கர்நாடக அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் கர்நாடக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு பள்ளி, கல்லூரி உள்பட கல்வி நிலையங்களில் மத அடையாளங்களை வெளிப்படுத்தும் ஆடைகள் அணிய தடை விதித்த கர்நாடக அரசின் உத்தரவு செல்லும் என உத்தரவிட்டது.

ஹிஜாப் இஸ்லாமிய மதத்தின் இன்றியமையாத நடைமுறை அல்ல என்று கூறிய உச்ச நீதிமன்றம், கல்வி நிலையங்களில் ஹிஜாப் அணிவதற்கு தடை விதித்து அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

நிலையங்களில் ஹிஜாப் அணிய தடை விதித்து கர்நாடக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்து செய்யக்கோரி, இஸ்லாமிய மத மாணவிகள், இஸ்லாமிய மத அமைப்புகள் உச்ச நீதிமன்றம் மேல் முறையீடு செய்தன.

இந்த வழக்கில் விளக்கமளிக்க கர்நாடக அரசுக்கு கடந்த 29ஆம் திகதி நோட்டீஸ் அனுப்பிய உச்ச நீதிமன்றம் வழக்கை 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்நிலையில், கல்வி நிலையங்களில் தடை விதித்து கர்நாடக உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் (05) விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் ஹிமந்த் குப்தா மற்றும் சுதான்ஷு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கின் போது நீதிபதிகள் தெரிவித்த கருத்துக்கள் பின் வருமாறு: - மத ரீதியில் நீங்கள் எந்த நடைமுறையை பின்பற்ற விரும்புகிறீர்களோ அதை பின்பற்ற உங்களுக்கு உரிமை இருக்கலாம். ஆனால், அந்த நடைமுறையை பின்பற்றி அந்த உரிமையை சீருடை நிச்சயம் அணியவேண்டிய பள்ளியில் கொண்டு வருவீர்களா? அது தான் கேள்வி.

பரிந்துரைக்கப்பட்டுள்ள சீருடையில் மாணவர்கள் வரமாறு தான் மாநில அரசு கூறுகிறது. ஹிஜாப் அணிய உங்களுக்கு மத ரீதியில் உரிமை இருக்கலாம். ஆனால் அந்த உரிமையை சீருடை நிச்சயம் அணியவேண்டிய கல்வி நிறுவனத்திற்குள் கொண்டு வரலாமா? ஹிஜாப் இஸ்லாமிய மதத்தின் இன்றியமையாத நடைமுறையா? இல்லையா? என்ற பிரச்சினையை சற்று மாற்றி அமைக்கலாம். அது இன்றியமையாத நடைமுறையாக இருக்கலாம் அல்லது இன்றியமையாத நடைமுறையாக இல்லாமலும் இருக்கலாம். நாங்கள் என்ன கூறுகிறேம் என்றால், அரசு கல்வி நிறுவனத்தில் (பள்ளி, கல்லூரி) நீங்கள் உங்கள் மத ரீதியிலான உடையை அணியலாமா? என்பது தான்.

ஏனென்றால், இந்திய அரசியலமைப்பின் முகப்புரை நமது நாடு மதச்சார்பற்ற நாடு என்கிறது. ஆனால், நீங்கள் மத ரீதியிலான உடை அரசு நடத்தும் கல்வி நிறுவனத்தில் அணியப்படவேண்டும் என கூறுகிறீர்கள். இது விவாதத்திற்கு உரியது. மாணவிகள் அவர்கள் விருப்பப்படி மிடி, மினிஸ் உள்ளிட்ட ஆடை அணிந்து வரலாமா?' என நீதிபதிகள் கூறினார்.

---

மயிலாடுதுறை

## துர்கா ஸ்டாலின் இவ்வளவு சிம்பிளா

மயிலாடுதுறை மாவட்டம் கீழப்பெரும்பள்ளத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலின், கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். கும்பாபிஷேக நிகழ்ச்சியில், முதல்வரின் குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

இந்த கோயில் அம்மன், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பக்தர்களுக்கு குலதெய்வமாக விளங்கி வருகிறது. அந்த வகையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலின் தந்தை ச.ஜெயராமனின் குலதெய்வ கோயிலாகவும் இக்கோயில் உள்ளது.



---

திருவனந்தபுரம்

## ஹிஜாப் அணிந்த பெண்கள் நடனமாடுவதா?

### முஸ்லிம் மதகுரு எதிர்ப்பு

கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு ஹிஜாப் அணிந்த இஸ்லாமிய பெண்கள் நடனமாடிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில் இதற்கு முஸ்லிம் மதகுரு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்.

கேரளா மாநிலத்தின் புகழ்பெற்ற பண்டிகையாக ஓணம் இருந்து வருகிறது. ஓணம் பண்டிகையன்று மலையாள மக்களின் கொண்டாட்ட முறையே அனைவரையும் வியக்கவும் ரசிக்கவும் வைக்கும்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமான ஓணம் பண்டிகை செப்டம்பர் 8 திகதி வரை கேரளாவில் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

10 நாட்கள்



கொண்டாடப்படும் இந்த பண்டிகை நாளில், புத்தாடை அணிந்து, விதவிதமான உணவு பொருட்களை சமைத்து உற்றார் உறவினர்களுக்கு கொடுத்து மகிழ்கின்றனர்.

பள்ளி நிர்வாகம் நடனமாட கட்டாயப்படுத்தி இருந்தால் அது சட்டவிரோதமானது. இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு அதிக மரியாதை இருக்கிறது. மற்ற ஆண்களின் முன்பாக நடனமாடுவது ஷரீஅத் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டு இருக்கிறது." என்று அவர் கூறி இருக்கிறார்.

---

கள்ளக்குறிச்சி

## 5 வயது ஆசை 50 இல் நிறைவேறியது

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் அருகே, குடும்ப ஏழ்மையின் காரணமாக சிறு வயதில் மொட்டை அடித்து, காது குத்தாமல் இருந்தவருக்கு, 50 வயதில் அவரது ஆசையை நிறைவேற்றி, உறவினர்கள் நெகிழ்ச்சி அடைய செய்தனர்.

இதையடுத்து ஏழுமலையின் சிறுவயது ஆசையை நிறைவேற்ற உறவினர்கள் முடிவு செய்தனர். இதற்காக குலதெய்வ கோயிலுக்கு அவரை அழைத்துச் சென்று, சிறு வயதில் மொட்டை அடித்து, காது குத்துவதைப் போல செய்தனர். அதன்படி, 50 வயதான ஏழுமலைக்கு மொட்டை அடித்து, தாய்மாமன் மடியில் அமர வைத்து காது குத்தி மகிழ்ந்தனர்.



---

காரைக்கால்

படிப்பில் மகளுக்கு போட்டி

## சக மாணவனை விஷம் வைத்து கொன்ற மாணவியின் தாய்

எட்டாம் வகுப்பில் படிக்கும் தனது மகளைவிட சக மாணவன் நன்றாக படிக்கிறான் என்பதற்காக விஷம் கொடுத்து மாணவனை கொலை செய்த சம்பவம் புதுச்சேரி காரைக்கால் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாணவன், வழக்கம்போல பள்ளிக்கு சென்றுள்ளார். பள்ளியின் ஆண்டு விழா என்பதால் அரைநாள் மட்டுமே பள்ளி செயல்பட்டுள்ளது. எனவே பிற்பகல் வீட்டிற்கு வந்த மாணவனுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதை கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் மாணவனை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அதாவது காவலாளியிடம் ஒரு பெண்மணி வந்து குளிபானத்தை கொடுத்து அதை மாணவனிடம் கொடுக்க சொல்லியதாக கூறியுள்ளார். இதை கேட்ட காவலாளியும், அதை மாணவனுக்கு கொடுத்துள்ளார். இதனை அருந்திய மாணவனுக்கு உடல் நகலக்குறைவு ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# குரல் பதிவு மூலம் கொரோனாவை கண்டறியும் செயலி

உலக நாடுகளில் இருந்து கொரோனா வைரஸ் தொற்று இன்னும் நீங்காத நிலையில், இத் தொற்றை எளிமையாக கண்டறிய அலைபேசி செயலி ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு மூலம் செயற்படும் இச் செயலி நோயாளிகளின் குரல் பதிவு மூலம் தொற்றை உறுதி செய்யும். அதாவது குறிப்பிட்ட நபரின் மருத்துவ வரலாறு, புகைப்பிடிக்கும் நிலை போன்ற சில அடிப்படை தகவல்களைப் பதிவு செய்து, பின்னர் அவர்களின் சில சுவாச ஒலிகளையும் பதிவு செய்ய வேண்டும். அதன்படி மூன்று முறை இருமல், மூன்று முதல் ஐந்து முறை வாய் வழியாக ஆழமாக சுவாசித்தல், திரையில் ஒரு சிறிய வாக்கியத்தை மூன்று முறை வாசிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

இவற்றின் மூலம் குறிப்பிட்ட அந்த நபருக்கு தொற்று இருக்கிறதா என்பதைத் துல்லியமாக இந்தச் செயலி தெரிவிக்கும் என நெதர்லாந்தை சேர்ந்த ஆய்வாளர் வபா அல்பவி தெரிவித்தார். இச்செயலி 89% அளவுக்கு துல்லியமாக முடிவைக் காட்டும்



எனத் தெரிவித்த விஞ்ஞானிகள், பிற பரிசோதனை முறைகளை ஒப்பிடுகையில் மிகவும் மலிவானது என்றும், குறைவான வருவாய் கொண்ட நாடுகளில் இவற்றை எளிதாக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளனர்.



பிரித்தானியா

## அதிரடி திட்டங்களை வெளியிட்ட லிஸ் ட்ரஸ்

பிரித்தானியாவின் மூன்றாவது பெண் பிரதமராக லிஸ் ட்ரஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர் கொண்டுவரவுள்ள புதிய திட்டங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில், விலைவாசி உயர்வால் கடும் அவதியில் இருக்கும் பிரித்தானிய மக்களுக்கு மிகுந்த ஆறுதல் அளிக்கும் வகையில் 100 பில்லியன் பவுண்ஸ் நிவாரண மற்றும் வரிக்குறைப்பு உள்ளிட்ட விடயங்கள் அத்திட்டத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, “நான் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டால் எனது முதல் வாரத்திலேயே முக்கிய முடிவெடுக்கப்படும்” எனத் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது லிஸ் ட்ரஸ் உறுதியளித்திருந்தார்.
அதேபோல, அவர் பிரதமராகத் தெரிவாகி இருக்கும் இந்த நேரத்தில், எரிசக்தி கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என லிஸ் ட்ரஸ் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.
மேலும், பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயுவின் மொத்த விலையை கட்டுப்படுத்தி, எரிசக்தி கட்டணத்தை குறைக்க வாய்ப்புள்ளதாக லிஸ் ட்ரஸ் கருதுகிறார்.

ஆனால், இந்த முடிவால் பல பெரிய நிறுவனங்கள் பெரும் இழப்பை எதிர்கொள்ள நேரிடும் என நிபுணர்கள் தரப்பில் இருந்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## ஒபாமாவுக்கு ‘எம்மி’

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு திரைத்துறையின் மிக உயரிய விருதான ‘எம்மி’ விருது வழங்கப்பட்டுள்ளது.

‘OUR GREAT NATIONAL PARK’ என்ற ஆவணத்தொடரில் இடம்பெற்ற காட்சிகளுக்கு பின்னணி விளக்கக் குரல் கொடுத்தமைக்காகவே அவருக்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இவ் விருதை வென்ற இரண்டாவது



அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையை பராக் ஒபாமா பெற்றுள்ளார்.
முன்னதாக டுவைட் ஐசனோவர் இவ்விருதை பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனா

சீனாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

## 46 பேர் உயிரிழப்பு

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நேற்று முன்தினம் (05) பி.ப 12.25 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
லுடிங் நகரில் இருந்து 39 கிலோ மீற்றர் தொலைவை மையமாக கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.8 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தால் அப்பகுதியில் உள்ள பல்வேறு கட்டடங்கள் அதிர்ந்துள்ளன.

இந்நிலையில், இந்நிலநடுக்கத்தில் சிக்கி 46 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்





எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா


## உயிரைக் காப்பாற்றிய ‘ஸ்மார் வொச்‘

அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணத்தில் பெரீயா என்ற இடத்தில் உடற்பயிற்சி கூடம் ஒன்று உள்ளது. அங்கு உடற்பயிற்சிக்கு சென்றிருந்த கிறிஸ்டின் பால்டஸ் என்ற பெண் தலைகீழாக தொங்கியபடி உபகரணம் ஒன்றில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவரால் அதிலிருந்து கீழே இறங்க முடியாமல் அதிலேயே சிக்கிக்கொண்டார்.

ஜிம்மில் அதிக சத்தத்துடன் பாட்டு இசைத்துக் கொண்டிருந்ததால், அவரின் அழைப்பு யாருக்கும் கேட்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அவரது கையில் இருந்த ‘ஸ்மார்ட் வோச்’ பயன்படுத்தி, அதன் வழியாக 911 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு பொலிஸ் அதிகாரியை வரவழைத்துள்ளார்.


அங்கு வந்த பொலிஸ் அதிகாரிகள் அவரை மீட்டுள்ளனர். இது பற்றி அதிகாரிடம் கிறிஸ்டின் கூறும் போது, “ஜிம்மில் ஒரே ஒரு நபர் மட்டுமே இருந்துள்ளார். தலைகீழாக சிக்கிக்கொண்ட போது நான் அழைத்தும் யாரும் என்னை காப்பாற்ற வரவில்லை. தலைகீழாக இருந்த நான் மேலே வரவும் முடியாமல் தவித்தேன்” என்று கூறியுள்ளார்.






அமெரிக்கா

## யுவதியின் உயிரை பறித்த கூந்தல்





அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் பொருட்களை பொதி செய்யும் பணியில் ஜெர்மானி தாம்சன் என்ற யுவதி ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர், அவரது தலைமுடி கன்வேயர் பெல்ட்டில் சிக்கியிருக்கிறது.

இதன் காரணமாக, அவர் படுகாயமடைந்த நிலையில், அவரது அலறல் சத்தம் கேட்டு பதறிப்போன அருகில் இருந்த விமான நிலைய பணியாளர்கள் அவரை மீட்டு மருத்துவனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விசாரணையில் பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிக்காததே இவ் விபத்திற்குக் காரணமெனத் தெரிய வந்துள்ளது.




ஆசியக் கிண்ணம்:

# இந்தியாவை வென்ற இலங்கை

ஆசியக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்றிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான இந்தியாவுக்கு எதிரான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா ஆரம்பத்திலேயே லோகேஷ் ராகுலை மகேஷ் தீக்‌ஷனவிடம் இழந்தது. அடுத்த ஓவரிலேயே விராட் கோலியையும் டில்ஷான் மதுஷங்கவிடம் இந்தியா இழந்தது.

இந்நிலையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, 72 (41) ஓட்டங்களுடன் சாமிக கருணாரத்னவிடம் வீழ்ந்திருந்தார். தொடர்ந்து சூரியகுமார் யாதவ்வும் 34 (29) ஓட்டங்களுடன் ஷானகவிடம் வீழ்ந்தார்.

சிறிது நேரத்தில் ஹர்டிக் பாண்டியாவும் ஷானகவிடம் வீழ்ந்ததோடு, தீபக் ஹூடா, றிஷப் பண்ட் ஆகியோர் மதுஷங்கவிடம் அடுத்த ஓவரில் வீழ்ந்தனர். இறுதி ஓவரில் புவ்னேஷ்வர் குமாரும் கருணாரத்னவிடம் வீழ்ந்த நிலையில், இரவிச்சந்திரன் அஷ்வினின் ஆட்டமிழக்காத 15 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

பதிலுக்கு 174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

இந்நிலையில், 52 (37) ஓட்டங்களுடன் யுஸ்வேந்திர சஹாலிடம் நிஸங்க வீழ்ந்ததுடன்,

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

அதே ஓவரில் சரித் அஸலங்கவும் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து வந்த தனுஷ்க குணதிலக, இரவிச்சந்திரன் அஷ்வினிடம் வீழ்ந்ததோடு, உடனேயே மெண்டிஸும் 57 (37) ஓட்டங்களுடன் சஹலிடம் வீழ்ந்திருந்தார்.

எனினும், அணித்தலைவர் ஷானகவின் ஆட்டமிழக்காத 33 (18), பானுக ராஜபக்‌ஷவின் ஆட்டமிழக்காத 25 (17) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் இலங்கை வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷானக தெரிவானார்.

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

மாவட்ட மட்ட விளையாட்டு விழாவில்

## சம்பியனான மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவு

எம்.எஸ்.எம். நூர்தீன்

47ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவுக்கு முன்னோடியாக நடாத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மட்ட விளையாட்டு விழாவில் ஆண்கள், பெண்கள் பிரிவில் 66 தங்கப் பதக்கங்களைப் பெற்று மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு சம்பியனாக தெரிவாகியுள்ளது.

வருடாந்தம் மாவட்ட மட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்படும் குழுநிலை, மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டும் வெபர் விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரயிறுதியில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

அதேவேளை 13 தங்கப் பதக்கங்களைப் பெற்று மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவு இரண்டாமிடத்தைப் பெற்றது.

அத்தோடு மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் பிரிவில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவு முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை ஆண்கள் பிரிவில் கோறளைப்பற்று மேற்கு பிரிவும், பெண்கள் பிரிவில் மண்முனை வடக்கு பிரிவும் தம்வசப்படுத்தியுள்ளது.

சுவட்டு மற்றும் மைதான நிகழ்வுகளில் சிறந்த வீராங்கனையாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவை சேர்ந்த செல்வி.எச்.ஈ. அவுட்ஸ்கோனிற்கும், சுவட்டு நிகழ்வுகளில் காத்தான்குடி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஏ,எல்.அஹமட் அரீஜ் சிறந்த வீரராகவும், மைதான நிகழ்வுகளில் சிறந்த வீரராகவும், மெய்வல்லுநர் போட்டிகளில் அதிசிறந்த வீரராகவும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த எம். கதுஸ்கர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.


ஐக்கிய அமெரிக்க பகிரங்க டெனிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்டார் நடால்

ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்றுவரும் ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் மூன்றாம் நிலை வீரரான ரஃபேல் நடால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் பிரான்ஸிஸ் தியஃபோயை எதிர்கொண்ட ஸ்பெய்னின் நடால், 4-6, 6-4, 4-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து வெளியேறினார்.

இதேவேளை, உலகின் ஒன்பதாம் நிலை வீரரான பிரித்தானியாவின் கமரொன் நோரி, 4-6, 4-6, 4-6 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் அன்ட்ரே ருப்லெவ்விடம் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.



## சம்பியனான சி முச்சக்கரவண்டி கழகம்

துவாரகஷான்

156ஆவது இலங்கை பொலிஸ் தினத்தை முன்னிட்டு இளைஞர்கள் மத்தியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கும், சிநேகபூர்வமான உறவை ஏற்படுத்தும் வகையில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் சி முச்சக்கர வண்டிக் கழகம் சம்பியனானது.

தலவாக்கலை நகரசபை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அணிக்கு ஆறு பேர் கொண்ட 18 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் டி முச்சக்கர வண்டிக் கழகத்தை வென்றே சி முச்சக்கர வண்டிக் கழகம் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 07 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.